# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: STC. 71/2019 | | |
| பெயர் : சதாநந்தம் | ம.சா.1 | நாள் : 12.01.2026 |

அரசு தரப்பு சாட்சியான ம.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.சுனில்குமார், கிரேடு 3 பென்ச் கிளர்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய முகவரி வேநாடு, தடா மண்டலம், பழைய நெல்லூர் மாவட்டம் தற்போதைய திருப்பதி மாவட்டம், ஆந்திரபிரதேசம். நான் இதற்கு முன்னர் கவரப்பேட்டை அடுத்த பன்பாக்கத்தில் குடியிருந்தேன். எதிரியின் தந்தை மற்றும் எதிரியின் குடும்பம் எனக்கு நல்ல பழக்கம் அந்த வகையில் எதிரி எனக்கு நண்பர். எதிரி என்னிடம் 5 லட்சம் பணம் கேட்டார் என்னிடம் இருந்த ரூ.4,45,000 தை கடனாக கொடுத்தேன். எதிரி கடன் கேட்ட இரண்டு மாத காலத்திற்குள் பணம் கொடுத்தேன். (சாட்சி தற்போது எதிரி ஜீன் மாதம் பணம் கேட்டதாகவும் தானும் ஜீன் மாதம் பணம் கொடுத்ததாகவும் அவ்வாறு வாங்கிய பணத்தைதான் இரண்டு மாதம் கழித்து கொடுப்பதாக எதிரி கூறினார் என்று கூறுகிறார்.) நான் 15 ஏக்கர் விவசாயம் செய்து வருகிறேன் அதனால் கடன் தொகையை உடனே தயார் செய்து கொடுத்தேன். கடன் தொகையை ரொக்கமாக கொடுத்தேன். கடன் தொகையை நிறுவனத்திற்காக கொடுத்தேனா என்றால் இல்லை எதிரிக்காக கொடுத்தேன். KRM குமரகம் சிட்பண்ட் நிறுவனத்திற்கும் நான் கொடுத்த பணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். எதிரி நண்பர் என்பதால் கடன் கொடுக்கும்போது கடன் பத்திரம் எழுதி வாங்கவில்லை. கடன் தொகை கொடுப்பதற்கு முன்பாக KRM குமரகம் சிட்பண்ட் நிறுவனத்திற்கும் எனக்கும் தொடர்பு உண்டு. மேற்படி நிறுவனத்தில் நானும் சீட்டு கட்டியுள்ள வகையில் எனக்கு தொடர்பு உண்டு. வருடத்திற்கு ரூபாய் 5 முதல் 10 லட்சம் வரை மேற்படி நிறுவனத்துடன் எனக்கு பரிவர்த்தனை உண்டு. புதாசாஆ1 காசோலையை எதிரி கவரப்பேட்டையில் உள்ள அவரது அலுவலகத்தில் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்தார் நான் சென்றவுடன் கொடுத்தார். எதிரிதான் என்னிடம் காசோலையை கொடுத்தார். 12.08.2016 அன்று

எதிரி காசோலையை கொடுத்தார். 08.08.2016 ல் KRM குமரகம் சிட்பண்ட் நிறுவனம் மூடப்பட்டதாக பத்திரிக்கை வாயிலாக செய்தி வெளிவந்தது என்றால் எனக்கு தெரியாது. இராமமூர்த்தி 12.04.2016 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 16.08.2016 ல் எனக்கு அளித்த காசோலை திரும்பிவிட்டது. Account Blocked என்ற குறிப்புடன் காசோலை திரும்பிவிட்டது. எதிரிக்கு உடனே அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை நான் அவருக்கு போன் செய்து கேட்டேன் அவர் சில நாட்கள் காத்திருக்கும்படியும் பிறகு சொல்வதாக கூறினார். எதிரி அழைத்த செல்போன் எண் எனக்கு தெரியும். 2016 ம் ஆண்டு 9 ம் மாதம் மீண்டும் அதே காசோலையை வங்கியில் செலுத்தினேன். எதிரி நான் போன் செய்தால் எடுக்கமாட்டார் என்பதால் KRM குமரகம் சிட்பண்ட் நிறுவனத்தில் வேலை செய்த ஒரு நபரின் செல்போனில் இருந்து எதிரிக்கு போன் செய்தேன். (அவர் பெயர் தெரியவில்லை, ஆனால் நன்கு பழக்கம்). இரண்டாவது முறையாக தாக்கல் செய்த காசோலை 2 நாட்களில் திரும்பிவிட்டது. அதன் பிறகு எதிரிக்கு அறிவிப்பு அனுப்பினேன். எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பினேன் என்று ஞாபகம் இல்லை. நான் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு Door locked என்ற குறிப்புடன் 27.09.2016 அன்று சார்வு ஆகாமல் திரும்பிவிட்டது என்றால் சரிதான். 2016 ல் நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சம்மந்தமான நீதிமன்ற அறிவிப்பு எதிரிக்கு எப்போது சார்வு ஆனது என்றால் இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றல் ஆகி வந்த சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்து எதிரி ஒரு நாள் வேறு வழக்கு தொடர்பாக நீதிமன்றத்திற்கு வந்திருந்தார் அப்போது நீதிமன்றத்தில் வைத்து அவருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. காசோலையில் உள்ள கையெழுத்து எப்போது போடப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்தை யார் போட்டது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி மீது நானும் எனது குடும்பத்தாரும் பொருளாதார குற்ற பிரிவில் புகார்கொடுத்து இருந்தோம் என்றால் சரிதான். அந்த புகாரிலும் எனக்கு ரூ.4,51,000 வரவேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை அது வேறு தொகையாகும். பிரகல்யா சீட்டு நிறுவனத்தில் எப்போது சீட்டு சேர்த்தேன் என்றால் சுமார் ஒரு 8 வருடங்களாக நான் அதில் சீட்டு கட்டியுள்ளேன். எதிரியின் வீடு பூட்டப்பட்டு இருந்ததால் நான் அனுப்பிய அறிவிப்பு தொடர்பான தகவல் அவரது வீட்டில் ஒட்டப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புதசாஆ 5 அறிவிப்பு எதிரியின் அலுவலகத்திற்கு அனுப்பபட்டது என்றால் சரிதான். நான் அறிவிப்பு

அனுப்பிய முகவரிதான் எதிரியின் முகவரி என்பதற்கு ஆதாரம் ஏதும் அளிதுள்ளேனா என்றால் இல்லை. அலுவலகம் பூட்டப்பட்டது குறித்து நான் நேரடியாக விசாரிக்கவில்லை. 12.02.2016 ம் ஆண்டு எதிரி KRM குமரகம் சிட்பண்ட் நிறுவனத்திலிருந்து விலகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கும் மேற்படி நிறுவனத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே கையொப்பமிட்ட காசோலையை எனக்கு தெரிந்த நபர் மூலம் பெற்று நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த பணமும் பெறவில்லையென்றாலும் எனக்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லையென்றாலும் சரியல்ல. KRM குமரகம் சிட்பண்ட் நிறுவனத்தில் நான் சீட்டு கட்டி எனக்கு தொகை வரவேண்டி உள்ளது என்று எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. KRM குமரகம் மற்றும் பிரகல்யா என்ற இரண்டு நிறுவனத்தையும் இராமமூர்த்தி நடத்தி வந்தார் என்றால் சரிதான். (சாட்சி தற்போது இராமமூர்த்தி மற்றும் அவரது மகனான எதிரியும் சேர்ந்து நடத்தியதாக கூறுகிறார்). மேற்படி இருவரும் சேர்ந்து நடத்தியதற்கு நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சீட்டு பணம் தொடர்பாக நான் ஏற்கனவே ஒரு புகாரை அளித்துவிட்டு அதே பணத்திற்காக நான் இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அது வேறு இது வேறு ஆகும். எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– சதாநந்தம்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.01.12 11:33:37 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி